# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2018–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 1–ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருள்கள்

1)இவ்வலுவலக வருவாய் ஆய்வர் அவர்களின் அறிக்கையின்படி இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, கதவு எண். 9–41 சி3 எண் கொண்ட கட்டிடம் திருமதி. ஸ்டெல்லா பெயரில் குடியிருப்பு பயன்பாடு என வரி விதிப்பு செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட கதவு எண் கொண்ட குடியிருப்பு 3 வருடங்களாக வீட்டு உபயோக அல்லாத இணைப்பாக இருந்து வருகிறது. மேற்படி வீட்டு உபயோகம் அல்லாத இணைப்பாக வழங்கியுள்ள வரிவிதிப்பு எண்.151/5461–ஐ (சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் நிலுவையினை செலுத்தப்பட்டுள்ளதால் ) வீட்டு உபயோக இணைப்பாக மாற்றம் செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**மன்றத் தீர்மானம் எண். 1319**

**அனுமதி வழங்கப்பட்டது.**

2)இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN74B 4577-க்கு 5 எண்ணம் புதிய டயர்கள் வாங்குவதற்கு 25–07–2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது. அவைகளின் விபரங்கள்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Grip Tyres Apollo Tyres. Thuckalay. | 12500/– |
| 2. | MRF Exclusive Adhithy Tyres Puliyoorkurichi | 12000/– |

மேலே குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளிகளில் வ.எண். 2–ல் உள்ள MRF Exclusive Adhithya Tyres, Puliyoorkurichy நிறுவனத்தின் விலைப்புள்ளிகுறைவாக உள்ளது. எனவே குறைந்த விலைப்புள்ளி கொடுத்து உள்ள Adhithya Tyres, Puliyoorkurichy நிறுவனத்தின்

விலைப்புள்ளியை ஏற்றும் அவசர அவசியம் கருதி விநியோக உத்திரவு வழங்கியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1410/2017/அ2)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1320</u>**

**அனுமதி வழங்கப்பட்டது.**

3) பத்மனாபபுரம் நகராட்சி ஆணையாளரின் ஜீன் மற்றும் ஜீலை 2018–ம் மாதத்திற்கான பயணப்படி பட்டியல்கள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | தொகை<br>ரூ . |
|---|---|
| ஜீன் 2018 | 3,550/– |
| ஜீலை 2018 | 9,430/– |

மேலும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மேலொப்பம் பெற்று வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.1566/2015/பி1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1321</u>**

**அனுமதிக்கப்பட்டது,**

4)இந்நகராட்சியில் 01–10–2018 முதல் தொழில்வரி உயர்வு செய்ததை பொது மக்கள் அறியும் வண்ணம் தினமுரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.14175/–னை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும், மேலும் இது தொடர்பாக ஏற்படுகின்ற செலவுகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 950/2018/அ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1322</u>**

**அனுமதிக்கப்பட்டது,**

5)நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண்.11 நாள் 12–01–1999–ன் படி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் அரையாண்டு தொழில்வரி கீழ் குறிப்பிட்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

| வ.எண். | அரையாண்டு வருமானம் | தொழில்வரி<br>ரூ. |
|---|---|---|
| 1. | ரூ.21000 வரை | – |
| 2. | ரூ. 21001 முதல் ரூ.30000 வரை | 118/– |
| 3. | ரூ.30001 முதல் 45000 வரை | 298/– |
| 4. | ரூ.45001 முதல் 60000 வரை | 587/– |
| 5. | ரூ.60001 முதல் 75000 வரை | 883/– |
| 6. | ரூ.75001–க்கு மேல் | 1173/– |

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 21–05–2018–ம் தேதிய 12503/2018/ஆர்1 சுற்றறிக்கையின் அடிப்படையில் 01–10–2018 முதல் தொழில் வரி 25 சதவீதம் வீதத்தில் குறையாமலும் 35 சதவீதம் விகிதத்திற்கு மிகாமலும் 5 வருடத்திற்கு ஒருமுறை தொழில்வரி சீராய்வு செய்ய சுற்றறிக்கையின் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட தொழில் ஸ்தாபனங்கள் மற்றும் பணியாளர்களின் தொழில் வரியினை 01–10–2018 முதல் 35 சதவீதம் தொழில்வரி உயர்வு செய்ய நகர் மன்ற தீர்மானம் எண்.1281, நாள் 04–06–2018 படி உயர்வு செய்ய நகர் மன்றம் அனுமதி வழங்கி உள்ளது.

மேலும் இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக பொது மக்களின் ஆட்சேபனை ஏதேனும் உள்ளது என 16–06–2018–ம் தேதிய தினமுரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது.

மேலும் நாளது தேதி வரையில் பொது மக்களிடத்திலிருந்து எந்தவித ஆட்சேபனையும் வரப்பெறவில்லை.

எனவே நகராட்சியின் நிதி நிலையினை கருத்தில் கொண்டு 01–10–2018 முதல் கீழ்கண்டவாறு தொழில்வரி உயர்வு செய்து அதனை நடைமுறைப்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | அரைவருட சராசரி வருமானம் | தற்போது வசூல் செய்யப்பட்டு | 35 சதவீதம் உயர்வு | 01–10–2018 முதல் நிர்ணயம் |
|---|---|---|---|---|

| | | வரும் தொகை ரூ. | ரூ. | செய்யப்பட்டு வரும் தொழில்வரி. |
|---|---|---|---|---|
| 1. | ரூ.2100/– | – | – | – |
| 2. | ரூ.21001 முதல் ரூ.30000/– வரை | 118/– | 41/– | 159/– |
| 3. | ரூ.30001 முதல் ரூ.45000/– வரை | 298/– | 104/– | 402/– |
| 4. | ரூ.45001 முதல் ரூ.60000/– வரை | 587/– | 205/– | 792/– |
| 5. | ரூ.60001 முதல் ரூ.75000 /– வரை | 883/– | 309/– | 1192/– |
| 6. | ரூ.75001/–க்கு மேல் | 1173/– | 411/– | அதிக பட்சம் 1250/– |

(ந.க.எண். 950/2018/அ1)

**மன்றத் தீர்மானம் எண். 1323, நாள் 01–08–2018.**

**அனுமதி வழங்கப்பட்டது,**

6) பத்மனாபபுரம் நகராட்சிக்குட்பட்ட பூங்காவில் பூங்கா மற்றும் அதன் அருகே உள்ள குப்பைகளை உரமாக்கிட ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மன்ற அனுமதி பெற்று நிர்வாக அனுமதி பெறவும், நிதி வழங்கிடவும் மருந்து கோட்டையில் Micro Composting Centre அமைக்கும் பணியுடன் சேர்த்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ஆய்வு கூட்டத்தின் போதும், 13–07–2018 அன்று இந்நகராட்சிக்கு வருகை புரிந்த போதும் Park Onsite Composting பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேற்படி பணிக்கு 2018–19–ம் ஆண்டு பொதுப்பணித்துறை கட்டுப்பாடு விலை விகிதத்தின்படி திருத்திய மதிப்பீடு ரூ. 7.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் வேலையை ரூ.7,50,000/– மதிப்பீட்டில் செய்யவும் மேற்படி பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்யவும், அதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அரசிடமிருந்து நிதி உதவி வரப்பெற்றால் அத்தொகையினை ஈடு செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். இ1/0455/2018)

**மன்றத் தீர்மானம் எண். 1324**

**அனுமதி வழங்கப்பட்டது,**

7) இந்நகராட்சிக்குட்பட்ட பெருமாள் கோவில் சாலை பகுதியில் சுவாமி ஹிருதாயந்தர் சமாதி அருகிலுள்ள கழிவு நீர் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் சாலையில் தேங்கி சுகாதாரகேடு ஏற்படும் வண்ணம் உள்ளது. மேலும் கழிவு நீர் ஓடை மிகவும் சிதலடைந்தும் காணப்படுகிறது. மேற்படி பொது மக்கள் நலன் கருதி கழிவு நீர் ஓடையினை சரி செய்து சுகாதாரகேடு ஏற்படுவதை தவிர்க்கவும் மேற்படி பணியைச் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,10,000/-க்கும் மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி செய்யவும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1344/2018/இ1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1325</u>**

**அனுமதி வழங்கப்பட்டது,**

8) இவ்வலுவலக உதவி திட்ட அமைப்பாளர் திரு. பி. ஆர். பாபு அவர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் பயணப்படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | மாதம் | தொகை<br>ரூ |
|---|---|---|
| 1. | ஏப்ரல் 2018 | 574/- |
| 2. | மே 2018 | 1148/- |
| 3. | ஜீன் 2018 | 3988/- |

(ந.க.எண். 1566/2015/பி1)

**<u>மன்றத் தீர்மானம் எண். 1326</u>**

**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/-
தனி அலுவலர்(ம)ஆணையாளர்
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.